# குருவிட்ட பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் குருவிட்ட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருவிட்ட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காண்டின் இறுதியில் நிறுவனத்தில் காணப்பட்ட மருந்து இருப்புக்கள் தவிர ஏனைய இருப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 93,253 கூட்டுத்தொகையான முற்பணமாகப் பெறப்பட்ட வருமான அளவு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது 30 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 10,770,686 கூட்டுத்தொகையான மீளாய்வாண்டிற்குரிய செலவினங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளியார் நிறுவனமொன்றிற்கு நிதிப்பிணைகள் இன்றி செலவினத் தலைப்பு இல. 505(2) இன் கீழ் செவிலி தகரம் பெற்றதற்காக ரூபா 150,000 தொகைக்கு கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் செலவினங்களில் சீராக்கப்பட்டிருந்தமையினால் பொறுப்புக்களுக்கு உள்ளடக்கப்படாது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவினங்களைக் கணக்கு வைத்தல்களில் ஆண்டின் மூலதனச் செலவினம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 57,299,575 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,077,963 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 605,658 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 21 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,574,865 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,706,273 ஆக இருந்தது.

(ஆ) 04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,724,558 ஆக இருந்ததுடன் பரீட்சை மீதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,322,713 ஆக இருந்தது.

(இ) சபையின் ஊழியர் ஒருவருக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து சபையின் மூலம் செலுத்தப்பட்ட ஆதனக்கடன் வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 88,272 இனை மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி சேவையில் இருந்த முன்னைய ஊழியர்களுக்காக சபையினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டியிருந்த ரூபா 2,054,598 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,213 | 2,228 | 3,513 |
| (ii) | வாடகை | 6,846 | 2,683 | 7,773 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,178 | 1,273 | (69) |
| (iv) | ஏனைய வருமானம் | 12,026 | 12,058 | 6,109 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,865,200 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,206,330 |

**2.3.3 ஆதனவரி**

----------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் 1834 ஆதனவரி அலகுகளில் 350 அலகுகளுக்காக ரூபா 2,219,957 தொகையான ஆதனவரி பல வருடகாலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.4 ஏக்கர் வரி**

-------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் 298 வரி அலகுகளுக்கான நிலுவை ஏக்கர்வரி வருமானம் ரூபா 194,750 ஆக இருந்தது.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்**

-------------------------------------------------------------------------------------------------------------------

சபைக்குரிய ரூபா 154,090 பெறுமதியுடைய கல் உடைக்கும் இயந்திரம் பாவனைக்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**2.5 செயற்பாடற்ற கணக்கு**

-----------------------------------------

10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,191 ஆக இருந்தது.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------------------

போபத் எல்ல நீர்வீழ்ச்சி நிலையத்தில் 2011 நவம்பர் 14 ஆந் திகதி தொடக்கம் 2011 நவம்பர் 21 ஆந் திகதி வரை நுழைவுச்சீட்டு விற்பனை வருமானம் ரூபா 41,150 ஆக இருந்ததுடன் 2011 நவம்பர் 21 ஆந் திகதிய பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் விற்பனையாளரினால் நுழைவுச்சீட்டு விற்பனை வருமானத்தில் ரூபா 36,240 தொகை நீண்டகாலமாக கையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 4,910 தொகையான நிதிக்குறைபாடும் அவதானிக்கப்பட்டது.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

I. குருவிட்ட தெல்கமுவ சந்தன அவர்களின் வீட்டிற்கு முன்னாலுள்ள வீதியின் எஞ்சிய பகுதிகளுக்கு கொங்கிரீட் கற்கள் இட்டு அமைத்தல் - (I ஆம் கட்டம்)

------------------------------------------------------------------------------------------------------------------------------

வேலையில் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 499,091 ஆக இருந்ததுடன் 2011 யூலை 01 ஆந் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டு ரூபா 497,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2011 நவம்பர் 21 ஆந் திகதிய களப்பரிசோதனையின் போது உரிய நியமங்களின்றி கொங்கிரீட் கற்கள் வீதியில் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 03 மாதங்களான குறுகிய காலத்தில் வீதி உடைந்த நிலைக்கு உள்ளாகியிருந்தது.

II. குருவிட்ட உடகட வீதியை செப்பணிட்டு அமைத்தல்

------------------------------------------------------------------------------------------

2011 ஏப்ரல் 05 ஆந் திகதி 03 மாத உடன்படிக்கைக் காலத்தில் ரூபா 708,828 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 ஏப்ரல் 08 ஆந் திகதி கொங்கிரீட் கற்கள் இட்டு வீதியின் அமைப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வீதியில் இடப்பட்டுள்ள கொங்கிரீட் கல் தொடர்பான தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் தொன் 25.10 இற்கும் 54.83 இற்கும் இடையிலான பலத்தைக்கொண்ட கொங்கிரீட் கல் இடப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 நவம்பர் 21 ஆந் திகதிய

கணக்காய்வு பரிசோதனைகளில் வீதியின் மேற்பரப்பு சேதமடைந்திருந்து மழைபெய்கின்றமையினால் தார் இட்டு கொங்கிரீட் இடப்பட்டு மூடப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளவாறான பரிசோதனை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிலைமையை உடைய மூப்பொருள் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டதா என்பது கேள்விக்குரியதாக இருந்தமையினால் நிர்மண செயற்பாடுகளுக்காக செலவிட்ட ரூபா 708,828 தொகை செயற்பாடற்ற நிலைமைக்கு உள்ளாகியிருந்தது.

III. குருவிட்ட கல்வேலிகம வீதியினை கொங்கிரீட் இட்டு அமைத்தல் (1 ஆம் கட்டம்)

---

அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் 2011 யூலை 06 ஆந் திகதி ரூபா 497,774 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 செப்தெம்பர் 02 ஆந் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. 2011 நவம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 மாதங்கள் கடப்பதற்கு முன் வீதியில் போடப்பட்டிருந்த கொங்கிரீட் கற்கள் உடைந்து கரைந்து செல்லும் நிலைமைக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய நியமங்களை உடைய கொங்கிரீட் கற்கள் வீதி அமைப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் நிர்மாண செயற்பாடுகளுக்காக செலவிட்ட ரூபா 497,774 தொகையும் செயற்பாடற்ற தன்மைக்கு உள்ளாகியிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 செப்தெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் பொதுக் கணக்கின் காசு மீதி ரூபா 21,531,771 ஆக இருந்த போதிலும் அதன் மேலதிகப் பணத்தை முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 சந்தர்ப்பங்களில் ரூபா 345,219 கூட்டுத்தொகையான முற்பணம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(இ) இன் பிரகாரம் உரிய செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனபடியாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் ரூபா 1,105,775 தொகையான காலாவதியான வைப்புக்களை வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 426,532 ஆக இருந்தது.

(உ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதிய உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 341,027 ஆக இருந்ததுடன் அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,099,542 ஆக இருந்தது.

(ஊ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீ/எப் /ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2002 திசெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் 402 மற்றும் 402(1) ஆம் இலக்க சுற்றுநிருபங்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்காக கூட்டிணைந்த திட்டமும், செயல்நடவடிக்கைத் திட்டமும், வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்